கிழங்குகள்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

கிழங்குப் பயிர்கள்

ஆசிரியர்கள் :

டாக்டர் கா. ஞா. சண்முகவேலு

ஆ. சண்முகம், எம். எஸ்சி. (விவ.)

வெளியீடு

தகவல் தொடர்பு நிலையம்

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

கோயமுத்தூர் - 3

1972

முன்னுரை

★

நமது உணவுப் பொருள்களில் கிழங்கு வகைகளுக்கு எப்போதுமே ஓர் இன்றியமையாத இடம் உள்ளது. பலவகைக் கிழங்குகள் நம் தமிழ் நாட்டிலும், அடுத்துள்ள கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலும் பரவலாகப் பயிர் செய்யப்படுகின்றன. மக்களும் அதை மிகவும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இந்தப் பலவகைப்பட்ட கிழங்கு வகைகளில் சர்க்கரை வள்ளிக் கிழங்கும், மரவள்ளிக் கிழங்கும் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் அவைகளில் நல்ல உணவுச் சத்துக்கள் உள்ளன. அவைகள் மூலம் விவசாய மக்களுக்கு நல்ல விளைச்சலும், வருமானமும் கிடைக்கின்றன. அத்துடன் மரவள்ளிக் கிழங்கு அதிக மண்வளம் இல்லாத நிலங்களிலும் கூட சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக உள்ளது. இது மணிச் சத்து மிகக் குறைவான நிலங்களிலும், காட்டுப் பிரதேசங்களிலும் பயிராக்கப்படுகின்றது. கேரள மாநிலத்தில் அப்படிப்பட்ட நிலங்களில் பயிராக்கப்பட்ட கிழங்குகளை மக்கள் விரும்பி மாற்று உணவாக உட்கொள்ளுகிறார்கள். மைசூரில் உள்ள மத்திய உணவு நுட்ப ஆராய்ச்சிக் கழகத்தில், இந்த கிழங்குகளில் உள்ள சத்துக்களை ஆராய்ந்துகொண்டு இருக்கிறார்கள். மரவள்ளிக் கிழங்கில் நல்ல சுண்ணும்பு, இரும்பு, வைட்டமின் 'சி' ஆகிய சத்துக்கள் இருக்கின்றன. சர்க்கரை வள்ளிக்கிழங்கில் வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி' நிறைந்து இருக்கிறது. அத்துடன் மாவுச் சத்தும் இருப்பதால் இவை இரண்டையும் அரிசிக்குப் பதிலாக 25 சதவீதம் உணவாக உட்கொள்ளலாமென்று, நிபுணர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் மரவள்ளிக் கிழங்கு சுமார் 40,000 எக்டேர்களிலும், சர்க்கரைவள்ளிக் கிழங்கு சுமார் 4,000 எக்டேர்களிலும் பயிராக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக மரவள்ளிக் கிழங்கு சேலம் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் அதிகமாகப் பயிர் செய்யப்பட்டு, அதன் மூலம் சவ்வரிசி தயார் செய்து, இந்தியா முழுவதும் மற்றும் அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார்கள். சர்க்கரைவள்ளிக் கிழங்கு தென் ஆற்காட்டிலும், திருச்சியிலும் அதிகமாகப் பயிராக்கப்படுகின்றது. இதைத் தவிர கருணை, சேப்பங்கிழங்கு முதலியவை பரவலாக ஊடுபயிர்களாகவும், மற்றும் குறைந்த அளவில் வீட்டுத் தோட்டங்களிலும் பயிராக்கப்பட்டு

வருகின்றன. மரவள்ளி, சர்க்கரை வள்ளி ஆகிய இவ்விரண்டு கிழங்கு வகைகளும், மற்ற கிழங்கு வகைகளும் நம் மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் பரவலாகப் பயிராக்கப்படுவதற்கு ஏற்ற வையாகும். ஆனல் தற்சமயம் அதிகமாகப் பயிராக்கப்படுவதில்லை. ஆகையினல் விவசாயப் பெருமக்களுக்கு இதைப்பற்றி எடுத் துரைப்பது நமது கடமையாகும்.

விவசாயப் பெருமக்கள் இந்தப் பயிர்வகைகளின் சாகுபடி செய்யும் சிறந்த முறைகளைத் தெரிந்து அதன்படி சாகுபடி செய்தால், அவர்களுக்கு நல்ல வருமானம் கிடைப்பதுடன், மக்களுக்கும் உண்பதற்கு அதிகமாகக் கிழங்கு வகைகள் கிடைக்கும். அதன் மூலம் நம் நாட்டு மக்கள் உட்கொள்ளும் உணவில் உள்ள சராசரி சத்துப்பொருள்கள் அதிகரிக்கும். மக்களுடைய உணவின் தரத்தைப் பொறுத்துத்தான் அவர்களுடைய முன்னோக்கமும், முன்னேற்றமும் இருக்கும். ஆகையால், அதிகமாகக் கிழங்கு வகைகள் பயிர் செய்வதை நாம் எல்லோரும் முழுமனதுடன் ஏற்றுக் கொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும்.

இந்தச் சிறிய நூலில் டாக்டர் கா. ஞா. சண்முகவேலு, திரு. ஆ. சண்முகம் ஆகிய இருவரும் கிழங்கு பயிரிடும் முறை வகைகளை நல்ல முறையில் எழுதியிருக்கிருர்கள். இது விவசாயப் பெருமக்களுக்கு நன்கு பயன்படும் என்று நம்புகிறேன். விவசாய விரிவாக்கத் துறையினரும் இதைப் பயன்படுத்தி கிழங்கு வகைகள் பயிராகும் நிலப்பரப்பை அதிகப்படுத்த முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

கோ. அரங்கசாமி,
துணைவேந்தர்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

கோவை,
10—8—1972.

பொருளடக்கம்

★

			பக்கம்
1.	மரவள்ளிக் கிழங்கு (Tapioca)	...	1
2.	சர்க்கரைவள்ளிக் கிழங்கு (Sweet Potato)	...	5
3.	சேனைக் கிழங்கு (Elephant yam)	...	10
4.	சிறு கிழங்கு அல்லது கூர்க்கன் கிழங்கு (Coleus)	...	11
5.	சேப்பங் கிழங்கு (Colocasia)	...	13
6.	வள்ளிக் கிழங்கு (Dioscorea)	...	15

கிழங்குப் பயிர்கள்

1. மரவள்ளிக் கிழங்கு (Tapioca)

தமிழ் நாட்டில், கிழங்கு சுமார் 38,600 எக்டேர் பரப்பில் கன்னியாகுமரி, நீலகிரி, கோவை, சேலம் போன்ற மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. இப்பயிர் மாற்று உணவுப் பொருளாகவும், சவ்வரிசி, சேமியா, மாவு, வற்றல் (சிப்ஸ்) தயாரிப்பதற்கும், மிக அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றது. சேலத்தில் மட்டும் 300 தொழிற்சாலைகளில் இந்த கிழங்கிலிருந்து சவ்வரிசி தயாரிக்கப் படுகிறது.

மக்காச்சோளம், கோதுமை போன்றவற்றிலிருந்து தயாரிக்கப்படும் சவ்வரிசியைவிட, மரவள்ளிச் சவ்வரிசி அதிக தொழிற் பயனுள்ளது. அத்துடன் கிடைக்கும் சவ்வரிசியின் அளவும் அதிகம். சேலத்தில் தயாரிக்கப்படும் சவ்வரிசிக்கு பாகிஸ்தான், ரஷ்யா இன்னும் பிற நாடுகளிலும் மிகுந்த கிராக்கியுள்ளது. இன்றைய நிலையில் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மேற்கு ஜெர்மனி, கனடா, இலங்கை, ரஷ்யா போன்ற நாடுகளின் தேவை மட்டும் சுமார் 10,000 டன்களை விடக் கூடுதலாக இருக்கிறது.

நிலமும், தட்ப வெட்ப நிலையும் :

மரவள்ளிக்கு, வெப்பம் அதிகமுள்ள, வடிகால் வசதியுள்ள மணற்பாங்கான செம்மண் நிலம் ஏற்றது. மற்ற எந்தப் பயிரும் வளராத நிலங்களில் கூட நீர் வசதியும், காற்றுப் போக்கும் இருக்குமாயின் மரவள்ளி நன்கு வளரும். களர் நிலங்கள் இப் பயிருக்குப் பயன்படாது. நீர் பற்றுக்குறையுள்ள இடங்களிலும் இதைப் பயிர் செய்யலாம். ஆனல் தண்ணீர் தேங்கக் கூடாது. மிகக் குளிருடனும், பனி பெய்யும் இடங்களிலும் இப்பயிரின் வளர்ச்சி தடைபடும். ஆண்டு முழுவதும் 20 முதல் 50 செ. மீ. மழை பரவலாகப் பெய்தால் இந்தப் பயிர் நன்கு வளரும்.

வகைகள் :

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பலவகைக் கிழங்குகளைப் பயிரிட்டு ஆராய்ச்சி செய்தபின் கீழே கண்டுள்ள இரகங்கள் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

எஸ். 2 (S. 2) :

இவ்வகை திருவனந்தபுரத்திலுள்ள மத்திய கிழங்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இது 2 முதல் $2\frac{1}{2}$ மீட்டர்

உயரமும், வீரிய வளர்ச்சியையும், நீளமான, பெரிய, அகன்ற கிழங்குகளையும், இளஞ்சிவப்பான தோலுடனும், வெண்மையுடன் கூடிய தடிப்பான சதைப்பிடிப்பும் கொண்ட வகை. ஒரு செடிக்கு இரண்டுக்கு மேற்பட்ட தண்டுகளும், எட்டு முதல் பத்து கிழங்கு களும் கிடைக்கும். ஒரு எக்டேரில் 45 முதல் 50 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

எஸ். 5 (S. 5):

இதுவும் மேலே கூறிய ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்ட புது ரகம். இது சுமாரான வளர்ச்சியும், இரண்டு முதல் நான்கு தண்டுகளும், நீண்ட, கூரிய முனையுடைய கிழங்குகளும், சிறிது வெளிறிய சிவப்பு நிறமுடைய கிழங்குகளும், வெண்ணிற மான சதைப் பிடிப்பும் கொண்டது. ஆறு முதல் எட்டு கிழங்குகள் ஒரு செடியில் கிடைக்கும். ஒரு எக்டேரில் 30 முதல் 35 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

எம். 4 (M. 4) (மலேயன். 4):

இது "மொசைக்" என்னும் நோய் தாக்காத வகை. இதன் சிறப்புக்களில் அதிக வளர்ச்சியும் (இரண்டு முதல் நான்கு மீட்டர் உயரம்), இரண்டுக்கும் மேற்பட்ட தண்டுகளும், நீண்ட, அகன்ற, கிழங்குகளும், இளஞ்சிவப்பான சதைப் பகுதியும் குறிப்பிடத் தக்கவை. ஒரு செடியில் 6 முதல் 9 கிழங்குகளும், ஒரு எக்டேருக்கு 25 முதல் 30 டன் விளைச்சலும் இவ்வகையைப் பயிரிடுவதின் மூலம் கிடைக்கும்.

மலவெள்ளா:

இவ்வகை நல்ல வீரியத்துடன் இரண்டு அல்லது இரண்டரை மீட்டர் உயரம் வளரக்கூடியது. கிழங்குகள் பெரிதாகவும், அடர்த் தியாகவும் காணப்படும். கிழங்குகளின் மேல் தோல் வெளிறிய பொடி நிறத்துடனும், உட்தோல் இளஞ்சிகப்புடனும் இருக்கும். ஒரு செடியில் 6 முதல் 9 கிழங்குகள் வரை காணப்படும். ஒரு எக்டேருக்கு சுமார் 25 முதல் 30 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

நடவுக்கேற்ற குச்சிகளும், நடவு முறையும்:

நல்ல திறனுள்ள, முழு வளர்ச்சியுடன் கூடிய தண்டுகளின் மத்தியப் பகுதியிலிருந்து 15 முதல் 20 செ. மீ. நீளமுள்ள குச்சிகளைக் கரணைகளாக வெட்டி நடவேண்டும்.

நிலத்தை மூன்று முதல் நான்கு தடவை உழுது, நன்கு தயாரிக்கப்பட்ட கம்போஸ்ட் அல்லது மாட்டு உரம் ஒரு எக்டேருக்கு 10 டன் என்ற அளவில் கலந்து நிலத்தைப் பண்படுத்த

மரவள்ளிக் கிழங்கு — எஸ். 2.



மரவள்ளிக் கிழங்கு — எஸ். 5.



மரவள்ளிக் கிழங்கு — எம் 4.



மரவள்ளிக் கிழங்கு — மலவெள்ளா.

வேண்டும். பின்னர் 75 செ. மீ. இடைவெளி விட்டு பார் பிடிக்க வேண்டும். நடுவதற்கு முன் நீர்ப்பாய்ச்சி, பாரின் நடுப் பாகத்தில் 90 செ. மீ. இடைவெளியில் 3 அல்லது 4 கணுக்கள் மண்ணிற்குள் நேராக நட வேண்டும். நீர், மண், நிலச்சரிவு ஆகியவற்றைப் பொறுத்து, மரவள்ளிக் குச்சிகளை பாத்திகளிலும், மண் மேடு கட்டியும் நடலாம். ஒரு எக்டேரில் நட 12,000 முதல் 15,000 குச்சிகள் தேவைப்படும். நடுவதற்கு முன், பூஞ்சாண நோய் தாக்காமலிருக்க குச்சிகளை போர்டோக் கலவையில் (1%) நனைத்து நடுதல் முக்கியம்.

நடும் பருவம் :

பொதுவாக சூன் மாதத்தில் மரவள்ளி நடப்படுகிறது. ஆனல் செப்டம்பர் மாதம் சிறந்ததெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே சூன் முதல் செப்டம்பர் வரையுள்ள காலத்தில் நடவு செய்வது நல்லது.

நீர்ப்பாய்ச்சுதல் :

நடுவதற்கு முன்னும், நட்ட மூன்ருவது நாளும் உயிர்த் தண்ணீரும், பின்னர் 8 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறையும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். மொத்தத்தில் 35 முதல் 40 முறை நீர் கட்ட வேண்டியிருக்கும். இது வறட்சியைத் தாங்கக் கூடிய பயிர்.

உர மிடுதல் :

நிலத்தைப் பண்படுத்தும்போது, மாட்டு உரம் போட்டு, நன்கு கலக்கப்பட வேண்டும். பின்னர் கீழேயுள்ள உர அளவை வகைக்கேற்றவாறு இரண்டு தடவைகளில் இடலாம்.

வகைகள்.

உரம்	மலவெள்ளா		எச். 1. (H. 1)		எஸ். 5. (S. 5.)	
	நடுவதற்கு முன்	நட்ட 3-வது மாதத்தில்	நடுவதற்கு முன்	நட்ட 3-வது மாதத்தில்	நடுவதற்கு முன்	நட்ட 3-வது மாதத்தில்
	அடி உரம்	மேலுரம்	அடி உரம்	மேலுரம்	அடி உரம்	மேலுரம்
அம்மோனியம் சல்பேட் ... (கிலோ / எக்டேர்)	250	250	375	375	125	125
சூபர் பாஸ்பேட் ... (கிலோ / எக்டேர்)	156	156	156	156	506	506
மியூரியேட் ஆப் பொட்டாசு ... (கிலோ / எக்டேர்)	83	83	125	125	83	83

பின்செய் நேர்த்தி :

மாதம் ஒரு முறை களையெடுத்து, நிலத்தைக் கொத்திவிடுதல் வேண்டும். நான்கு முதல் ஐந்து முறை களையெடுத்தல் அவசியம். நட்ட மூன்ருவது, நான்காவது மாதங்களில் 2–வது தடவை உரம் இட்டு மண் அணைக்கவேண்டும். நட்ட இரண்டு மாதங்கள் கழித்து, ஒரு செடிக்கு இரண்டு கிளைகளை மட்டும் விட்டு மற்ற வற்றை வெட்டிவிடவேண்டும்.

ஊடு பயிர் :

குச்சிகளை நட்ட பின்னர் அவை வளர்ந்து பெருஞ் செடிகள் ஆவதற்குள் (4 மாதங்கள் வரை) செடிகளுக்கிடையே நிலக்கடலை முள்ளங்கி, பீட்ருட், வெங்காயம், வெண்டை போன்ற குறுகிய காலப் பயிர்களை ஊடு பயிர்களாகச் சாகுபடி செய்யலாம். ஊடுயிர்களைக் குச்சிகள் நட்ட பாரின் எதிர்ப்பக்கத்தில் நட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு :

'மொசைக்' என்ற வைரஸ் நோயும், இலைப்புள்ளி நோயும், மரவள்ளியைத் தாக்கும். 'மொசைக்' வெண்ணிறப் பூச்சிகளின் (White Flies) மூலம் பரவும். அதற்கு ரோகார் என்ற மருந்தை (0·1%) மூன்று முதல் நான்கு தடவை தெளிக்கவேண்டும். இலைப்புள்ளி நோயிலிருந்து செடிகளைக் காக்க போர்டோக் கலவை (5 : 5 : 50) என்ற விகிதத்தில் தெளிக்கவேண்டும். இவை தவிர தண்டுகளைத் தாக்கும் செதில் பூச்சிகளை, மெடாசிஸ்டாக்ஸ் (0.05%) மருந்தைத் தெளித்து, பயிரைப் பாதுகாக்கலாம்.

அறுவடை :

வகைகளைப் பொறுத்து, இப்பயிர் 8 முதல் 10 மாதங்களில் பலன் தரும். கிழங்குகள் முற்றி, அறுவடைக்குத் தயாராகும் பொழுது, இலைகள் மஞ்சள் நிறமடைந்து, காய்ந்து, உதிரும். மேலும் செடிக்கு அடியே பூமியில் வெடிப்புத் தோன்றும். முற்றிய கிழங்குகளில் மண் ஒட்டுவதில்லை. இந்த அடையாளங்களை வைத்து, கிழங்கு முற்றிவிட்டதா என்பதைத் தெரிந்து கொள்ள லாம். கிழங்குகளைத் தோண்டுவதற்கு நிலத்தை நீர்ப்பாய்ச்சி இரும்பு முள், கடப்பாரை போன்ற கருவிகளைப் பயன்படுத்தி கிழங்குகளைக் காயப்படுத்தாமல் தோண்டவேண்டும். தண்டுப் பகுதிகளை நிழலில் பத்திரப்படுத்தி, நடவுக்குப் பயன்படுத்தலாம் (விதைக் கரணைக்காக).

விளைச்சல் :

வகைகளைப் பொறுத்து விளைச்சல் மாறுபடும். ஆராய்ச்சிப் பண்ணைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ். 1 (S. 1.), எஸ். 5 (S. 5.) வகைகள் எக்டேருக்கு 35 முதல் 50 டன் வரையிலும், மலேயன் ·4 வகை 25 முதல் 30 டன் வரையிலும் கொடுக்கும்.

சாகுபடிச் செலவும், வரவும் :

வகை, சாகுபடி முறை, கூலி போன்றவற்றைப் பொறுத்து சாகுபடிச் செலவு மாறுபடும். தோட்ட நிலங்களில் சாகுபடிச் செலவு, எக்டேர் ஒன்றுக்கு ரூ. 1,950/ ஆகும். ஒரு எக்டேரில் கிடைக்கும் 30 டன் கிழங்குகளின் மூலம் ரூ. 6,000/- வரை (டன் ஒன்றுக்கு ரூ. 200/- வீதம்) வருமானம் கிடைக்கும். ஆகவே சாகுபடிச் செலவு போக ரூ. 4,050/- நிகர லாபம் கிடைக்கும். இவை தவிர தண்டுகளை வீணாக்காமல் அவைகளை விதைக் கருணைகளாக பயன்படுத்தினால் அதன் மூலம் ரூ. 200/- முதல் ரூ. 300/- வரை வருமானம் கிடைக்கும்.

2. சர்க்கரைவள்ளிக் கிழங்கு (Sweet Potato)

தமிழ் நாட்டில், இப்பயிர் சுமார் 5,000 எக்டேர் பரப்பில் பயிரிடப்படுகின்றது. இக்கிழங்கு முக்கிய மாற்று உணவுப் பயிராகவும், நிறையக் கலோரி சக்தி கொடுக்கின்ற உணவாகவும் கருதப்படுகிறது. இதில் வைட்டமின் 'ஏ'-யும், 'சி' சத்துக்களும் மிகுதியாக இருக்கிறது. சர்க்கரைவள்ளிக் கிழங்கின் மாவை (Flour) கோதுமை மாவுடன் கலந்து பயன்படுத்தினால் மிகவும் சத்துள்ளதாகி விடுகிறது. மேலும் பசையும், வாசனைப் பொருட்களும், சலவைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களும், ரொட்டி மற்றும் சுவையான இனிப்புப் பொருட்களும் இதிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. தொழிற்சாலைக்குத் தேவையான சாராயம் (Alcohol) தரங்குறைந்த சர்க்கரைவள்ளிக் கிழங்கிலிருந்தும் தயாரிக்கப்படுகின்றது.

மண்ணும், தட்ப வெட்பமும் :

சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஒரு உஷ்ணப் பிரதேசப் பயிர். வறட்சி, நீர்த்தேக்கம், பனி ஆகியவற்றை இப்பயிர் தாங்காது. நிறைந்த சூரிய ஒளியும், மிதமான மழையும், வெட்பமான இரவுக் காலமும் இப்பயிருக்கு மிகத்தேவை. இவ்வகைக் கிழங்கு சூரிய ஒளிக்குத் தகுந்தவாறு, தனது வளர்ச்சியை மாற்றிக்கொள்ளும் (Photosensitive).

ஆழமான, மணற்பாங்கான, வடிகால் வசதியுள்ள நிலங்களே இதன் சாகுபடிக்கு ஏற்றது. இறுகிய மண் நிலமும், களிமண் பூமியும் ஏற்றதல்ல.

வகைகள் :

கோவையில் செயல்படும் மத்திய கிழங்கு அபிவிருத்தித் திட்டத்தில் கீழே கண்ட வகைகள் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

வி. 6 (V. 6):

இதன் சாகுபடிக் காலம் 135 முதல் 150 நாட்கள் வரை ஆகும். இவ்வகை சீன தேசத்தைச் சார்ந்ததாகும். சுமாரான அகலம் உடைய கிழங்குகளும், மஞ்சள் நிறமான சதையும், நல்ல ருசியும், சிவந்த தோலும், ஒரு எக்டேருக்கு 18 முதல் 25 டன் விளைச்சலும் இதனுடைய சிறப்பான அம்சங்கள்.

வி. 8 (V 8):

இவ்வகை அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்தது. பெரிய, வெள்ளை நிறமான தோலுடன் கூடிய இளம் மஞ்சள் நிறமான சதைப்பிடிப்புக் கொண்ட கிழங்குகள் கொண்ட வகை. இதன் சாகுபடிக் காலம் 120 முதல் 135 நாட்கள் ஆகும். விளைச்சல் ஒரு எக்டேருக்கு 18 முதல் 20 டன் வரை கிடைக்கும்.

வி. 12 (V. 12):

இதுவும் சீன தேசத்து வகையாகும். 120 முதல் 135 நாட்கள் வயதுடைய இவ்வகையின் கிழங்குகள் நீண்டும், பெருத்தும், தோல் வெள்ளை நிறத்துடனும், சதை வெளுத்த மஞ்சள் நிறமாகவும், ருசியுள்ளதாகவும் இருக்கும். விளைச்சல் ஒரு எக்டேருக்கு 17 முதல் 18 டன் வரை கிடைக்கும்.

எச். 1 (H. 1):

திருவனந்தபுரத்திலுள்ள மத்திய கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் பண்பகக் கலப்பு முறையில் உருவாக்கப்பட்ட இவ்வகை 150 நாட்கள் வயதுடையது. கிழங்குகள் மிதமான அளவும், வெண்ணிறச் சதையும், தோலும் கொண்டது. ஒரு எக்டேருக்கு 15 முதல் 16 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

எச். 3 (H. 3):

இதுவும் மேற்கூறிய நிலையத்தில் உருவாக்கப்பட்ட புதிய ரகம். 150 நாட்கள் வயதுடைய இவ்வகையின் கிழங்குகள் மிதமான



சர்க்கரைவள்ளிக் கிழங்கு — வி. 6.

சர்க்கரைவள்ளிக் கிழங்கு — வி. 12.

சர்க்கரைவள்ளிக் கிழங்கு — எச். 1.

சர்க்கரைவள்ளிக் கிழங்கு — எச். 3.

DR. K. G. SHANMUGAVELU
B.SC. (AG.), M.SC., PH.D.

சர்க்கரைவள்ளிக் கிழங்கு — எஸ். பி. 1.

சர்க்கரைவள்ளிக் கிழங்கு — எஸ். பி. 4.



சேனைக் கிழங்கு



சேப்பங் கிழங்கு

அளவுடனும், இளஞ் சிவப்புத் தோலும், வெண்ணிறச் சதைப் பிடிப்பும் கொண்டது. ஒரு எக்டேரில் 18 முதல் 20 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

மேலே கூறிய வகைகளைத் தவிர கீழே கண்ட வகைகளும் சாகுபடிக்குச் சிறந்ததென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

எஸ். பி. 1 (S.P.1.):

இது திருச்சி மாவட்டத்திலுள்ள முசிரியில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. 120 நாட்கள் வயதுடைய இவ் வகையின் கிழங்குகள் நீண்டும், மிதமான அளவுடனும், சிவப்பான தோலும், வெண்ணிறச் சதைப் பிடிப்பும் கொண்டது. ஒரு எக்டேரில் விளைச்சல் 16 முதல் 17 டன் வரை கிடைக்கும்.

எஸ். பி. 4 (S. P. 4):

இதுவும் திருச்சி மாவட்டத்தில் பயிரிடப்படும் வகை. 120 முதல் 135 நாட்கள் வயதுடையது இலைகள் மிகுந்த குழிவாகவும், சிகப்பாகவும் இருக்கும். கிழங்குகள் பெரிய அளவுடனும், தோல் சிவப்பு நிறத்துடனும், சதை ஆரஞ்சு நிறத்துடன் அழகாகவும், ருசியுள்ளதாகவும் உள்ளது. ஒரு எக்டேரில் 15 முதல் 16 டன் வரை விளைச்சல் பெறலாம்.

எஸ். பி. 13 (S. P. 13):

'ரத்னகர் வகை' 120 முதல் 125 நாட்கள் வயதுடைய இவ்வகை யின் கிழங்குகள் மிதமான அளவு முதல் பெரிய அளவுடனும், சிவப்பான தோலும், சதை இளம் மஞ்சள் நிறத்துடனும் இருக்கும். இவ்வகையில் ஒரு எக்டேருக்கு 18 முதல் 20 டன் வரை கிழங்குகள் கிடைக்கும்.

எஸ். பி. 18 (S. P. 18):

'ஆலங்குலம் வகை' 120 முதல் 125 நாட்கள் வயதுடையது. இலைகளின் நிறம் இளம் பச்சை நிறத்துடனும், கத்திரிப்பூ (Violet) நிறமும் கலந்திருக்கும். நீளமான, உருண்டையான கிழங்குகள் தோல் இளஞ்சிவப்பு நிறத்துடனும், வெளுத்த சதையும் கொண்டது. விளைச்சல் ஒரு எக்டேருக்கு 15 டன் வரை கிடைக்கும்.

நடவுக்கேற்ற கொடிகள்:

சர்க்கரைவள்ளிக் கிழங்கு, பொதுவாக கொடிகளின் மூலம் விருத்தி செய்யப்படுகிறது. 20 செ. மீ. நீளமுள்ள கொடிகளை, நுனிப் பகுதியிலிருந்தோ அல்லது கொடியின் மத்தியிலிருந்தோ வெட்டி எடுத்து நடலாம். கொடியின் நுனிப் பகுதி விருத்தி செய்ய மிக நல்லதென ஆராய்ச்சிகளின் மூலம் தெரியவந்துள்ளது.

நடவு :

நிலத்தை மூன்று முதல் நான்கு முறை உழுது நன்கு பண படுத்த வேண்டும். பின்னர் 10 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் போட்ட பின் 75 செ. மீ. அளவில் பார் பிடிக்க வேண்டும். நடுவதற்கு முன்னர் நீர்ப்பாய்ச்சி, 20 செ. மீ. நீள முள்ள கொடிகளை 20 செ மீ. இடைவெளிக்கு ஒன்றுக, வரப்பின் நடுப்பாகத்தில் நடவேண்டும், கொடியின் நுனிகளை நடும்பொழுது, மூன்றில் ஒரு பாகம் மண்ணின் அடியில் இருக்கவேண்டும். கொடியின் மத்தியப் பகுதியை நடவுக்குப் பயன்படுத்தும்போது, கொடியின் இரு முனைகளும் மேலே தெரிகின்ற மாதிரி, மத்திய பகுதி மண்ணிற்குள் இருக்கும்படியாக நடவேண்டும். ஒரு எக்டேர் நடவுக்கு 25,000 கொடிகள் தேவை. நாற்றங்கால்களின் மூலமும் கொடிகளை அபிவிருத்தி செய்யலாம். ஒரு எக்டேருக்கு 15 முதல் 20 சென்ட் நிலம் நாற்றங்காலுக்குத் தேவை.

பருவம் :

செப்டம்பர் மாதம் பின் பகுதியிலிருந்து அக்டோபர் மாதம் முன் பாதி வரை சிறந்த பருவம்.

நீர்ப்பாய்ச்சுதல் :

வாரத்திற்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சவேண்டும். மொத்தமாக இப்பயிருக்கு 12 தடவை நீர்ப்பாய்ச்சவேண்டும். நீர் குறைந்தால் விளைச்சலும், கிழங்கின் அளவும் குறையும். துளைப்பான் பூச்சி களும் தோன்ற ஏதுவாகும்.

உரமிடுதல் :

கடைசித் தடவை நிலத்தை உழும்பொழுது ஒரு எக்டேருக்கு 10 டன் வீதம் நன்கு மக்கிய மாட்டு உரமிட்டு, நன்கு கலக்க வேண்டும். பின்னர் கீழே கண்டுள்ள அளவுகளில் நடுவதற்கு முன்பும், நட்ட 2 மாதங் கழித்தும் மறு பாதியை இட வேண்டும்.

உரத்தின் பெயர்	உரமிடும் காலமும், அளவும் (கிலோ / எக்டேருக்கு)	
	நடும் பொழுது	நட்ட 2 மாதத் திற்குப் பின்னர்
அம்மோனியம் சல்பேட் ...	125	125
சூபர் பாஸ்பேட் ...	312	312
மியூரியேட் ஆப் பொட்டாசு ...	125	125

பின்செய் நேர்த்தி :

இப்பயிருக்கு 3 அல்லது 4 தடவை களை எடுக்கவேண்டும். கொடிகளை அடிக்கொருதரம் இடம் மாற்றி, புரட்டி விடுவதின் மூலம், கொடியின் கணுவில் வேர் பிடிப்பதைத் தடுப்பதுடன், கிழங்குகள் பெருக்க ஏதுவாகும்.

பயிர்ப் பாதுகாப்பு :

கிழங்குகளைத் தாக்கும் துளை வண்டு (Weevil) என்ற பூச்சியைத் தவிர வேறு எந்த பூச்சியும் இந்தப் பயிரை அதிகமாகத் தாக்குவதில்லை. அப்பூச்சிகளை டையல்டிரின் அல்லது சுமத்தியான் (0. 1%) மருந்தை நட்ட 60 ஆம் நாளிலிருந்து 15 தினங்களுக்கொரு முறை 5 அல்லது 6 முறை தெளிக்கவேண்டும்.

அறுவடை :

சர்க்கரைவள்ளிக் கிழங்கை $4\frac{1}{2}$ மாதம் முடிந்த பின்னர் அறுவடை செய்யலாம். முற்றிய கிழங்குகளில் மண் ஒட்டாது. வளைத்தால் இலகுவாக இரண்டாக ஒடியும். மேலும் முற்றிய கிழங்குகளை வெட்டிப்பார்க்கும் பொழுது அதில் காணும் பால் காய்ந்தால் வெண்ணிறத்தைத் தரும். இவைகளே முற்றிய கிழங்குகளை அறுவடை செய்வதற்குத் தகுந்த குறிப்புகளாகும். மேலும் ஒரிரு செடிகளைத் தோண்டிப்பார்த்தும் கிழங்கு முற்றிய நிலையைக் கண்டறியலாம்.

கிழங்குகளைத் தோண்டும் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னரே நீர்ப்பாய்ச்சி, இலை, கொடிப்பாகங்களை வெட்டி விட்டு, மண்வெட்டி, முள் போன்ற ஆயுதங்களைக்கொண்டு கிழங்குகளைத் தோண்ட வேண்டும்.

விளைச்சல் :

வகைகளைப் பொறுத்து விளைச்சல் மாறுபடும். பொதுவாக ஒரு எக்டேரில் 15 முதல் 20 டன் வரை விளைச்சல் கிடைக்கும். கொடிகளை, கிழங்குகளை அறுவடை செய்த பின்னர், மாட்டுத் தீவனமாக பயன்படுத்தலாம். நல்ல உரமாகவும் உபயோகப் படுத்தலாம்.

சாகுபடிச் செலவும், நிகர லாபமும் :

ஒரு எக்டேரின் சாகுபடிச் செலவு ரூ. 1,500/–ஆகும். மொத்த வருமானம் ரூ. 5,000/– கிடைக்கும். (கிலோ 25 பைசா வீதம்). இதில் சாகுபடிச் செலவு போக ரூ. 3,500/– நிகர லாபம் கிடைக்கும். இனவிருத்திக்கான கொடிகளை விற்பனை செய்வதின் மூலம், மேல் வருமானம் ரூ. 200/–வரை கிடைக்கும்.

3. சேனைக் கிழங்கு (Elephant yam)

இந்த கிழங்கு வகை மிகுந்த சத்தும், நீண்ட நாட்களுக்கு கெடாத தன்மையும், மருத்துவப் பயன்களும் (மூல வியாதிகளுக்கு இதனை ஊறுகாயாக உபயோகிக்கலாம்) கொண்ட காய்கறிப் பயிர்.

நிலமும், தட்ப வெட்பமும் :

வெப்பமான அல்லது மித வெப்பமான பகுதிகளில் இப்பயிர் நன்கு வளரும். இப்பயிரின் முன் பருவத்தில் பரவலான மழையும், மித வெட்பமும் தேவை. பயிரில் கிழங்குகள் உருவாகும் தருணத்தில் சிறிது குளிரான, பனியற்ற காற்றும் தேவை. செம்மண் பூமி மிக ஏற்றது. வடிகால் வசதியுடன் கூடிய மணற் பாங்கான நிலமும் தேவை.

வகைகள் :

இரண்டு வகைச் சேனைக் கிழங்குகள் இருக்கின்றன. அதில் ஒரு வகையின் கரணைகள் வழுவழுப்பாகவும், சாப்பிடும்போது தொண்டையில் கரிப்பையும் ஏற்படுத்தும். மற்ற வகை உண்ணுவதற்கு ஏற்றது. அத்துடன் மேலே கூறிய கெடுதியும் கிடையாது.

நடவுக்கேற்ற கரணைகள் :

நடவுக்கேற்ற கரணைகளைத் தேர்ந்தெடுப்பது, இதன் சாகுபடியில் முக்கிய அம்சம். சேனைக் கிழங்கின் மேல் பாகத்தில் சிறு வட்ட வடிவமான பாகத்தில் முளைகள் இருக்கும். சேனைக் கிழங்கை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி நடவேண்டும். அங்ஙனம் வெட்டும் பொழுது, ஒவ்வொரு துண்டிலும், வட்ட வடிவமான பாகம் (முளைகள்) இருக்கவேண்டும். ஒரு முழுக் கிழங்கிலிருந்து 6 முதல் 8 கரணைகள் நடவுக்கேற்றவாறு கிடைக்கும். நடும் முன்னர் இந்தக் கரணைகளை மாட்டுச் சாணத்தில் நனைத்து நட்டால், சீக்கிரம் வாடாது, நன்கு வேர் பிடிக்கும்.

நடவுமுறை :

நிலத்தை 4 முதல் 5 முறை உழுது நன்கு பண்படுத்தவேண்டும். பின்னர் எக்டேருக்கு 10 டன் முதல் 15 டன் வரை மக்கிய மாட்டெரு போடவேண்டும். பின்னர் 20—25 செ. மீ. ஆழத்தில், குழிகளை 90 செ. மீ. இடைவெளி விட்டு நடவேண்டும். நடும் பொழுது முளையின் வட்ட வடிவமான பாகங்கள் மேல் நோக்கி இருக்கவேண்டும். ஒரு எக்டேர் நட, 2,500 முதல் 3,200 கிலோ கரணைகள் தேவைப்படும்.



சிறு கிழங்கு — செடி

சிறு கிழங்கு

வள்ளிக் கிழங்கு — கொடி



வள்ளிக் கிழங்கு

பருவம் :

சேனைக் கிழங்கு நடுவதற்கு மே, ஜுன் மாதங்கள் ஏற்றவை.

நீர்ப்பாய்ச்சுதல் :

வாரத்திற்கொருமுறை நீர்பாய்ச்சுதல் போதுமானது. வெயில் காலங்களில் நீர் பாய்ச்சுதல் அவசியம்.

உரமிடுதல் :

நட்ட 3 மாதங்கழித்து ஒரு எக்டேருக்கு அம்மோனியம் சல்பேட் 170 கிலோ, சூபர் பாஸ்பேட் 204 கிலோ, மியூரியேட் ஆப் பொட்டாசு 120 கிலோ என்ற அளவில் கலந்து போடவேண்டும்.

அறுவடை :

நட்ட எட்டாவது மாதத்தில் கிழங்குகள் முற்றி ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் அறுவடைக்குத் தயாராகும். கிழங்குகள் முற்றியவுடன் தண்டும், இலைப்பாகமும் வாடி உதிரும்.

விளைச்சல் :

ஒரு எக்டேரில் 25 முதல் 30 டன் வரை கிழங்குகள் கிடைக்கும்.

சாகுபடிச் செலவும், நிகர லாபமும் :

தோராயமாக ஒரு எக்டேர் சேனைச் சாகுபடிக்கு ரூ. 4,550/- செலவு ஆகும். ஒரு எக்டேரில் கிடைக்கும் விளைச்சல் 25 டன்னி லிருந்து (ரூ. 500/ டன்) ரூ. 12,500/- வரை மொத்த வருமானம் கிடைக்கும். அதில் சாகுபடிச் செலவு போக மீதி ரூ. 7,950/- நிகர லாபமாகக் கிடைக்கப்பெறலாம்.

4. சிறு கிழங்கு அல்லது கூர்க்கன் கிழங்கு (Coleus)

சிறு கிழங்கு அல்லது கூர்க்கன் கிழங்கு தமிழகம், கேரளம் போன்ற மாநிலங்களில் பயிரிடப்படுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் இது அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. இக் கிழங்கை உருளைக்கிழங்கிற்குப் பதிலாக உபயோகிக்கலாம்.

நிலமும், தட்ப வெட்பமும் :

வெப்பமான, மிதமான வெப்பப் பிரதேசங்கள் இப்பயிர் சாகுபடிக்கு ஏற்றது. செம்மண் பூமியும், நல்ல வடிகால் வசதியும், நிழலும் இப்பயிர் நன்கு வளர மிக முக்கியம்.

நடவும், நடும் முறையும்

நடுவதற்கு இளந்தண்டுகள் (10 செ. மீ. நீளம்) பயன் படுத்தப்படுகிறது. இந்த வகைத் தண்டுகள் நாற்றங்காலில் தயாரிக்கப்படுகிறது. நன்கு முளைவிட்ட கிழங்குகளைப் பாத்திகளில் மே, ஜுன் மாதங்களில் 20 முதல் 30 செ. மீ. இடைவெளி விட்டு நட்டு, பின்னர் 30–வது நாளில் கொடிகளைக் கிள்ளி எடுக்க வேண்டும். நாற்றங்காலில் நிழல் தரும் வாழை போன்ற செடிகளை நடுவதுடன் இளஞ் செடிகளின் அடியில் காய்ந்த இலைகளையும் மேலே போடவேண்டும். செடிகள் முளைக்கும்வரை அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும். ஆனல் நீர் தங்கக்கூடாது. நடுவதற்கு ஏற்ற இளந்தண்டுகள் ஒரு மாதத்தில் கிடைக்கும். இத்தகைய தண்டுகளை 10 செ. மீ. நீளமுள்ளதாக கிள்ளியெடுத்து (இரண்டு அல்லது மூன்று கணுவுள்ள) நடவேண்டும்.

நிலத்தை 4 முதல் 5 தடவை உழுது எக்டேருக்கு 10 டன் முதல் 15 டன் வரை உரமிட்டு நன்கு பண்படுத்தவும். பின்னர் ஆட்டு உரமும் இடலாம். பின்னர் 60 முதல் 75 செ. மீ. இடைவெளி விட்டு வரப்புக் கட்ட வேண்டும். நடும் முன்னர் நீர் பாய்ச்சி, வரப்புக்கு மேலே தண்டுகளை நேராக வைத்து நடவேண்டும்.

பருவம் :

ஜுன், ஜுலை மாதங்கள் நடவுக்கு ஏற்ற பருவம்.

நீர்ப்பாய்ச்சுதல் :

நட்ட மூன்ரும் நாள், உயிர்த் தண்ணீரும், பின்னர் வாரம் ஒரு முறையும் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

உரமிடுதல் :

நட்டு 2 மாதங்கள் ஆன பின்னர் கீழே கண்ட உரக் கலவையைப் போடவேண்டும்.

		ஒரு எக்டேருக்கு
அம்மோனியம் சல்பேட்	...	176 கிலோ
சூபர் பாஸ்பேட்	...	204 கிலோ
மியூரியேட் ஆப் பொட்டாசு	...	120 கிலோ

பின்செய் நேர்த்தி

நட்ட பின் 2 அல்லது 3 முறை களை எடுக்க வேண்டும். மண் அணைத்தலும் முக்கியம்.

அறுவடை :

கிழங்குகள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் அறுவடைக்கு வரும். இலைகள் மஞ்சள் நிறமாகி, உதிரும் நிலை வருகிறபோது கிழங்குகள் முற்றி அறுவடைக்குத் தயாராகும். காய்ந்த கொடிகளை அகற்றிவிட்டு மண்வெட்டி கொண்டு, கிழங்குகளைத் தோண்ட வேண்டும்.

விளைச்சல் :

ஒரு எக்டேருக்கு 15 முதல் 20 டன் கிழங்குகள் கிடைக்கும்.

சாகுபடிச் செலவும், நிகர வருமானமும் (ஒரு எக்டேருக்கு) :

சாகுபடிச் செலவு	...	ரூ.	1,200/-
மொத்த வருமானம்	...	ரூ.	7,200/-
நிகர லாபம்	...	ரூ.	6,000/-

5. சேப்பங் கிழங்கு (Colocasia)

வீட்டுத் தோட்டங்களிலும், வாழைத் தோட்டங்களிலும் ஊடு பயிராக இக் கிழங்கை சாகுபடி செய்யலாம்.

மண்ணும், தட்ப வெட்பமும் :

வெப்பமும், ஈரமும் கலந்த பகுதியில் இப்பயிர் நன்கு வளரும். மித வெப்பமான மலை அடிவாரங்களில், நன்கு உரமிடப்பட்ட நிலம் இப்பயிருக்கு ஏற்றது.

வகைகள் :

இதில் இரண்டு வகைகள் சாகுபடியில் இருக்கின்றன.

1. வெள்ளை நிறவகை :

இவ்வகை அதிகப் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இலையும், இலையின் நுனியும் பச்சை நிறமாக இருக்கும்.

2. கருப்பு நிறவகை :

இலையும், இலையின் நுனியும் கத்தரிப்பூ (Violet) நிறத்தில் இருக்கும்.

நடவு முறை :

முளைத்த கிழங்குகளை நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். காயமான, சிறிய, பூச்சி தாக்கிய கிழங்குகளை ஒதுக்கிவிட வேண்டும்.

நிலத்தை 3 முதல் 4 முறை உழுது பண்படுத்தி, 10 முதல் 15 டன் வரை மாட்டு உரம் (ஒரு எக்டேருக்கு) போட்டு சமப் படுத்த வேண்டும். பின்னர் விதைக் கிழங்குகளை 30 செ. மீ. × 60 செ. மீ. அளவுகளில் 45 செ. மீ. இடைவெளி விட்டு பாத்தி களில் நடவேண்டும். ஒரு எக்டேர் நடுவதற்கு 500 முதல் 750 கிலோ முளைத்த கிழங்குகள் தேவைப்படும். நட்டவுடன் பாத்தி களின் மேல் உலர்ந்த இலைகளை நிழலுக்காகப் போடுவது நல்லது.

பருவம் :

பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் நடலாம்.

நீர்ப்பாய்ச்சுதல் :

நடும் முன்னரும், பின்னரும் நீர்ப் பாய்ச்சலாம். பின்னர் வாரம் ஒரு முறை நீர்ப் பாய்ச்சினால் போதுமானது.

உரமிடுதல் :

கீழே கண்ட உரங்களை, நட்ட 2-வது மாதத்தில் போட வேண்டும்.

அம்மோனியம் சல்பேட்	...	500 கிலோ	(எக்டேருக்கு)
சூபர் பாஸ்பேட்	...	312 ,,	,,
மியூரியேட் ஆப் பொட்டாசு	...	166 ,,	,,

பின்செய் நேர்த்தி :

இரண்டு, மூன்று தடவை களையெடுத்து மண் அணைக்க வேண்டும். பக்கவாட்டில் வளரும் கிளைகளை ஒன்று அல்லது இரண்டை மட்டும் விட்டு மற்றதை அகற்ற வேண்டும்.

அறுவடை :

நட்ட ஆறு மாதங்களில் கிழங்குகளை அறுவடை செய்யலாம்.

விளைச்சல் :

ஒரு எக்டேரில் 8 முதல் 10 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

சாகுபடிச் செலவும், நிகர லாபமும் :

ஒரு எக்டேர் சாகுபடி செய்ய ரூ. 2,500/- செலவு ஆகும். அதிலிருந்து ரூ. 4,000/- வரை மொத்த வருமானம் கிடைக்கும். அதில் செலவு போக, நிகர லாபம் ரூ. 1,500/- வரை கிடைக்கும்.

6. வள்ளிக் கிழங்கு (Dioscorea)

இந்த வகைக் கிழங்கு சில சமயங்களில் "இந்தியாவின் உருளைக் கிழங்கு" என்று அழைக்கப்படுகிறது. இவைகள் சாதாரண உருளைக் கிழங்கைவிட சற்று இனிப்பாக இருக்கும். இது மிகவும் மலிவாக வேர்களில் உருவாகும் கிழங்கு வகைக் காய்கறிப் பயிர். கிழங்குகள் வெளியே பார்ப்பதற்கு கருப்பான நிறமாக இருந்தாலும், உள்ளே வெண்மை, மஞ்சள், கத்திரிப்பூ (Violet), சிவப்பு என்ற பல வண்ணங்களில் இருக்கும். இதில் சிறுவள்ளி, பெருவள்ளி ஆகிய இரு வகைகள் இருக்கின்றன.

நிலமும், தட்ப வெட்பமும்:

வெப்பப் பிரதேசங்களில் இப்பயிர் நன்கு வளரும். நல்ல சத்துள்ள, வளமான, மணற்பாங்கான நிலமே இதற்கு ஏற்றது. தண்ணீர் தங்கும் இறுகிய நிலங்கள் இதற்கு ஏற்றதல்ல.

நடவும், நடும் முறையும்:

முற்றிய கிழங்குகளையும், அவைகளின் துண்டுகளையும் நடுவதற்குப் பயன்படுத்தலாம். நிலத்தை 3 முதல் 4 முறை உழுது, நன்கு பண்படுத்தி ஒரு எக்டேருக்கு 10 டன் மாட்டு உரமிட்டு, 30 செ. மீ. இடைவெளிவிட்டு, வரப்புக்கட்டி மேலே கூறிய கிழங்குத் துண்டுகளை நடவேண்டும்.

பருவம்:

நடவுக்கு மே, ஜூன் மாதங்கள் மிகவும் ஏற்றது.

நீர்ப்பாய்ச்சுதல்:

அடிக்கடி நீர்ப்பாய்ச்சுதல் இந்த பயிருக்கு நல்லது. மொத்தமாக 10 முதல் 15 தடவை நீர்ப்பாய்ச்சவேண்டும்.

உரமிடல்:

நட்ட இரண்டாவது மாத மத்தியில் ஒரு எக்டேருக்கு அம்மோனியம் சல்பேட் 400 கிலோவும், மியூரியேட் ஆப் பொட்டாசு 200 கிலோ என்ற அளவிலும் போடவேண்டும்.

பின்செய் நேர்த்தி:

நட்ட ஒரு மாதத்தில், கிழங்குத் துண்டுகள் முளைத்து கொடியாகப் படரும். கொடிகளைப் பந்தலிட்டுப் படரவிடவேண்டும். உரமிட்டு இரு மாதங்கள் ஆன பின்னர், செடிகளைச் சுற்றி மண் அணைக்கவேண்டும்.

அறுவடை :

கிழங்குகளை டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை செய்யலாம். இலையும், தண்டுகளும் வாடி மஞ்சள் நிறமடைந்து, செடியின் அடிப்புற பூமியில் வெடிப்பு தோன்றுகின்ற பொழுது, கிழங்குகளை அறுவடை செய்வது நல்லது.

விளைச்சல் :

ஒரு எக்டேருக்கு 15 முதல் 16 டன் வரை விளைச்சல் கிடைக்கும்.

சாகுபடிச் செலவும், நிகர லாபமும் :

சாகுபடிச் செலவு ஒரு எக்டேருக்கு ரூ. 2,000/- வரை ஆகும். மொத்த வருமானம் ரூ. 3,500 முதல் ரூ. 4,000 வரைக் கிடைக்கும். செலவு போக நிகர லாபம் ரூ. 1,500 முதல் ரூ. 2,000 வரை ஒரு எக்டேர் பரப்பில் கிடைக்கும்.

COPRESS கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம் லிமிடெட், கோயமுத்தூர் - 18

DR. K. G. SHANMUGAV[...]
B.SC. (AG.). M. SC., PH. D.

தரமான விதைகளுக்கும், செடிகளுக்கும்

பல்கலைக்கழக விதை விற்பனை நிலையத்தை

அணுகவும்

பல்கலைக்கழக செய்தி வெளியீடு எண். 2